## கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்!

# வணிகர்களின் வளர்ச்சிக்கு ‘திராவிட மாடல்’ அரசு எப்போதும் துணைநிற்கும்!

## மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு வர்த்தக சங்கத்தில் 100–வது ஆண்டு நிறைவு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**மதுரை, ஜன. 23 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.1.2025) மதுரையில் நடைபெற்ற மதுரை -தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் 100-வது ஆண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-**

வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநிலத் தலைவர் விக்கிரமராஜா அவர்கள் எந்த நிகழ்ச்சிக்கு அழைத்தாலும் அதை தட்டாமல், கட்டாயமாக கலந்துகொள்ளக்கூடிய வாய்ப்பை நான் பெறுவதுண்டு. ஏனென்றால், விக்கிரமராஜா அவர்கள் ஒரு சங்கத்தின் தலைவர் மட்டுமல்ல, வணிகர்களின் நலனுக்காக செயல்படுகின்ற ஒரு தோழர் மட்டுமல்ல; இந்தப் பொறுப்புகளை எல்லாம் கடந்து, நம்முடைய திராவிட மாடல் அரசின் நல்லெண்ணத் தூதுவராக செயல்பட்டு கொண்டிருப்பவர்.

**கலைஞர் பிறந்த ஆண்டும் இந்த அமைப்பு உருவான ஆண்டும் ஒன்றே!**

ஏற்கனவே, தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் பவள விழாவில், இங்கே உரையாற்றிய நம்முடைய ஜெகதீசன் அவர்கள் குறிப்பிட்டது போல, இதே மதுரையில் அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டார். அவரே சொன்னார், தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்த ஆண்டும், இந்த அமைப்பு உருவான ஆண்டும் ஒரே ஆண்டுதான். அவருடைய நூற்றாண்டில், தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கமும் நூற்றாண்டு நிறைவு விழா காண்பது அதற்காக நான் முதலில் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரைக்கும், வணிகர்களுக்கு ஆதரவாக, உங்கள் நலனுக்காக செய்து வரக்கூடிய பணிகள் எல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதேபோல், நம்முடைய அரசின் முயற்சிகளுக்கெல்லாம் துணையாக இருக்கும் அமைப்பாக நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் ஆற்றி வரக்கூடிய பணிகள் எல்லாம் பாராட்டுக்குரியது.

**வணிகர் நலன் - சமுதாய நலனுக்காக பணியாற்றுகிறார்கள்!**

5 ஆயிரத்து 500 உறுப்பினர்கள், 250 இணைப்புச் சங்கங்கள் என்று இந்தியாவிலேயே பெரிய வணிகர் அமைப்பாக இருக்கும் நீங்கள், வணிகர் நலனுக்காகவும், சமுதாய நலனுக்காகவும் மிகவும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

சமச்சீரான, எல்லாருக்கும் எல்லாம் என்ற அடிப்படையிலான நம்முடைய அரசின் பயணத்தில், வணிகப் பெருமக்களான உங்களுடைய ஆதரவு மிக மிக முக்கியம். எங்கள் முயற்சிகளுக்கு எப்போதும் நீங்கள் துணையாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு மிகவும் இருக்கிறது. அதேபோல், உங்களின் வளர்ச்சிக்கும் நம்முடைய அரசு எப்போதும் உறுதுணையாக இருக்கும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**விக்கிரமராஜா கோட்டைக்கு வந்தால் ஒரு காரியத்தை முடித்து விட்டுத்தான் செல்வார்!**

நீண்ட நேரம் பேசுவதற்கு வாய்ப்பில்லாத காரணத்தால் நான் உடனடியாக விமானத்தை பிடித்து சென்னைக்குச் செல்ல வேண்டியுள்ளது. இந்த நிகழ்ச்சிக்கு விக்கிரமராஜா அழைத்தபோது, நீங்கள் நிகழ்ச்சிக்கு வந்தால் மட்டும் போதும் என்று அழைத்தார். அவர் எப்போதும் இப்படிதான் செய்வார். அதேபோல தான் இப்போதும் செய்திருக்கிறார். வந்தவுடன் நேராக உள்ளே அழைத்து வந்து மேடையில் உட்கார வைத்துவிட்டார். பேசவும் வைத்துவிட்டார். அதனால் தான் அதிகமாக என்னால் பேச வாய்ப்பில்லை; நேரமுமில்லை. இருந்தாலும், இன்றைக்கு உங்களது நிகழ்ச்சியில் கலந்து கொண்டதில் உள்ளபடியே நான் பெருமைப்படுகிறேன்; மகிழ்ச்சியடைகிறேன். என்னைப் பொறுத்தவரைக்கும், மீண்டும் ஏதாவது கோரிக்கை உள்ளதா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. ஏனென்றால், எல்லா கோரிக்கையையும் நம்முடைய விக்கிரமராஜா மற்றும் இங்கு இருக்கக்கூடிய நிர்வாகிகளும் அடிக்கடி என்னை சந்தித்து எப்படி பேச வேண்டுமோ, அப்படி பேசி, எப்படி வியாபாரிகள் அந்த வியாபாரத்தை அதிகப்படுத்துவதற்கு பேசி, பேசி அதை சாமர்த்தியமாக வியாபாரம் செய்வார்களோ, அதேபோல, அரசிடமும் சாமர்த்தியமாக பேசி, செய்யக்கூடிய ஆற்றல் இங்கே இருக்கக்கூடிய நிர்வாகிகள் அத்தனை பேருக்கும் இருக்கிறது. அதிலும் குறிப்பாக விக்கிரமராஜா அவர்கள் எப்போது கோட்டைக்கு வந்தாலும் சரி, ஏதாவது ஒரு காரியத்தை முடித்துவிட்டு தான் செல்வார். அப்படிப்பட்ட ஆற்றலுக்குரியவர்.

அவர் முன்னின்று இன்றைக்கு இந்த நிகழ்ச்சிக்கு என்னை வரவேண்டும் என்று அழைத்து, வரவழைத்திருக்கிறார். அதற்காக மீண்டும் ஒருமுறை நன்றி சொல்லி, இங்கே வைத்திருக்கக்கூடிய கோரிக்கையை பொறுத்தவரைக்கும், நிச்சயமாக, உறுதியாக அதுவும் பரிசீலிக்கப்பட்டு, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். நாங்கள் சொன்னதைதான் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம் – அதுவும் உங்களுக்குத் தெரியும்.

அந்த உணர்வோடு, அந்த நம்பிக்கையை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து, இந்த அளவோடு என் உரையை நிறைவு செய்து கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

# சிவகங்கை மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் - முதல்வர் வழங்கினார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

**சிவகங்கை மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டப் பணிகளின் விவரங்கள்**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில்** உரத்துப்பட்டி ஊராட்சி, கிழவயல் ஊராட்சி-மணியாரம்பட்டி, உலகம்பட்டி ஊராட்சி, குன்னத்தூர் ஊராட்சி ஆகிய இடங்களில் 49 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டடங்கள்;

பிரான்பட்டி, சிங்கம்புணரி, மறமங்கலம், மருதங்கநல்லூர், நெஞ்சத்தூர், கங்கனி ஊராட்சி - உலக்குடி, திருப்பாச்சேத்தி ஊராட்சி - திருப்பாச்சேத்தி தெற்கு, கீழடி ஊராட்சி – பசியாபுரம், கானூர் ஊராட்சி ஆகிய ஊராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலை மற்றும் தொடக்கப் பள்ளிகளில் 3 கோடியே 36 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள்;

வாரப்பூர் ஊராட்சி - குரும்பலூரில் 25 இலட்சம் ரூபாய் செலவில் சமுதாயக்கூடம், புழுதிப்பட்டி ஊராட்சி - மீனாட்சிபுரம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் – நெற்குப்பை, கல்லல் ஊராட்சி ஒன்றியம் - அ. சிறுவயல் ஊராட்சி, கண்ணங்குடி ஊராட்சி ஆகிய இடங்களில்

2 கோடியே 73 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சுகாதார நிலையக் கட்டடங்கள்;

தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம் – நாச்சான்குளம் ஊராட்சி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் – மேலப்பசலை ஊராட்சி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் - தெற்கு சந்தனூர் ஊராட்சி ஆகிய இடங்களில்

1 கோடியே 27 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி செயலகக் கட்டடங்கள்;

தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம் – திருவேகம்பத்தூர் ஊராட்சியில்

9 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சுயஉதவிக் குழுக்களுக்கான பணிமனை, கண்ணங்குடி ஊராட்சியில் 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கோ- லொகேஷன் சென்டர், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், வீரனேந்தல் ஊராட்சி – கிடாக்குழி கிராமத்தில் 13 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கிராம ஊராட்சி சேவை மையக் கட்டடம்;

திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கொந்தகை ஊராட்சி – கட்டமன்கோட்டை கிராமம், ஓடாத்தூர் ஊராட்சி ஆகிய இடங்களில் 18 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பொது விநியோகக் கடைகள், கல்லல் ஊராட்சி ஒன்றியம், கீழப்பட்டமங்கலம் ஊராட்சி – பெரிச்சிக்கோவில் முதல் தெற்கு நைனார்ப்பட்டி சாலை, சுண்ணாம்பிருப்பு வரத்துக் கால்வாயில் 4 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், மாரந்தை ஊராட்சி - கோரவலசை சாலை மாரந்தை கால்வாயில் 1 கோடியே 69 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலம், மாரந்தை ஊராட்சி-தளிர்தலை கிராமம், கோரவலசை சாலை-மாரந்தை கால்வாயில் 3 கோடியே 27 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கீழடி ஊராட்சி, அருங்காட்சியகம் அருகில் ரூபாய் 24 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புற சோதனை சாவடி கட்டிடம் என 17 கோடியே 84 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவிலான முடிவுற்ற திட்டப் பணிகள்;

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில்** காரைக்குடி மாநகராட்சியில் கழனிவாசல் – கோட்டையூர் சாலையில் 6 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் தினசரி காய்கறி அங்காடி, புதுவயல் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3-ல் 2 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் வாரச் சந்தை;

**பள்ளிக்கல்வித் துறை சார்பில்** புழுதிபட்டி அரசு மேல்நிலைப் பள்ளி, சாத்தனூர் அரசு மேல்நிலைப் பள்ளி, திருப்புவனம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, முடிகண்டம் அரசு உயர்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் 6 கோடியே 93 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடங்கள்

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில்** திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் 3 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விபத்து மற்றும் அவசர பிரிவுக் கட்டடம், **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை சார்பில்** நகரம்பட்டி கிராமத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் சிலை;

**வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில்** சிங்கம்புணரி வட்டாரம், மல்லாக்கோட்டையில் 50 இலட்சம் ரூபாய் செலவில் துணை வேளாண்மை விரிவாக்க மையம், கண்ணங்குடி வட்டாரத்தில் 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் மானாமதுரை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் 1000 மெ.டன். கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்கு;

**காவல்துறை சார்பில்** 8 கோடியே 71 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய் செலவில் 1 ஆய்வாளர், 3 சார்பு ஆய்வாளர் மற்றும் 46 காவலர்கள் குடியிருப்புடன் கூடிய திருப்பத்தூர் நகர் காவலர் குடியிருப்பு, **பால்வளத்துறை சார்பில்** கல்குறிச்சி ஊராட்சியில் 16 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் செலவில் வி. கரிசல்குளம் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் கிளாதரி ஊராட்சியில் 24 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் செலவில் கிளாதரி பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கான புதிய கட்டடங்கள்;

**என மொத்தம் 51 கோடியே 37 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் செலவில் 46 முடிவுற்ற திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**சிவகங்கை மாவட்டத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட புதிய திட்டப் பணிகளின் விவரங்கள்**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில்** திருவேகம்பத்தூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் வட்டார சுகாதார நிலையம், எம். கரிசல்குளம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம், சாலைக் கிராமம் ஊராட்சியில் வட்டார சுகாதார நிலையம், மறவமங்கலம் ஊராட்சியில் வட்டார சுகாதார நிலையம் ஆகிய சுகாதார நிலையங்களில் 2 கோடியே 51 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள், எஸ். புதூர் ஊராட்சி மற்றும் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் - புதுவயல் ஆகிய இடங்களில் 11 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், நெற்குப்பை மற்றும் திருப்புவனம் பேரூராட்சிகளில் 34 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டடங்கள்;



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.1.2025) சிவகங்கையில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி, காதர்பாட்சா முத்துராமலிங்கம், சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் ஆகியோர் உடனிருந்தனர்.

**நீர்வளத்துறை சார்பில்** திருப்புவனம் வட்டம், வைகை ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்து கானூர், பழையனூர் மற்றும் இதர 17 கண்மாய்களுக்கு 40 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாசன வசதியளிக்கும் திட்டம் மற்றும் சிவகங்கை வட்டம், கல்லராதினிப்பட்டி, திருமலை, நாமனூர், மேலப்பூங்கடி, சாலூர், சோழபுரம், நாலுகோட்டை ஆகிய கிராமங்களில் உள்ள ஷீல்டு கால்வாய் மற்றும் அதன் கண்மாய்களை 28 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சீரமைத்தல் மற்றும் புதுப்பிக்கும் பணி;

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில்** கோட்டையூர் பேரூராட்சிக்குட்பட்ட அரசு ஆரம்ப சுகாதார வளாகம், நெற்குப்பை பேரூராட்சிக்குட்பட்ட அரசு ஆரம்ப சுகாதார வளாகம், நாட்டரசன் கோட்டை பேரூராட்சிக்குட்பட்ட அரசு ஆரம்ப சுகாதார வளாகம் ஆகிய சுகாதார வளாகங்களில் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள்;

தேவகோட்டை நகராட்சி, சருகனி சாலையில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு 11 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வடிவமைத்தல், கட்டுமானம், இயக்குதல் மற்றும் கழிவுநீர் கடத்துதல் பணி, காரைக்குடி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் 33 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை அமைக்கும் பணி;

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில்** பெரியகோட்டையில் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில்** காரைக்குடியில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வீரகவியரசர் முடியரசனார் திருவுருவச் சிலை அமைக்கும் பணி, சிவகங்கையில் 1 கோடியே 6 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மருதுபாண்டியர் சகோதரர்கள் திருவுருவச் சிலை அமைக்கும் பணி, **வணிகவரித் துறை சார்பில்** காரைக்குடியில் 1 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வணிகவரித் துறை கட்டடம், **மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில்** பூலான்குறிச்சி அரசு மருத்துவமனையில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம்;

**பள்ளிக்கல்வித் துறை சார்பில்** சிங்கம்புணரி ஆர்.எம்.ஆர்.எம். அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சாலைகிராமம் அரசு மேல்நிலைப் பள்ளி, கோவிலூர் அரசு உயர்நிலைப் பள்ளி, வி.மலம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி, கல்குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளி, விசாலயன்கோட்டை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் 7 கோடியே 91 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறைக் கட்டடங்கள்;

**தாட்கோ சார்பில்** சிங்கம்புணரி மற்றும் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் ஆதிதிராவிடர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிகள், ஆலடிநத்தம், அமராவதிபுதூர், கிருங்காக்கோட்டை ஆகிய இடங்களில் ஆதிதிராவிடர் நலகிராம அறிவு மையங்கள், மல்லல் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் 10 வகுப்பறை மற்றும் ஒரு அறிவியல் ஆய்வுக்கூடம், என 14 கோடியே 66 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்கள்;

கூட்டுறவுத் துறை சார்பில் 3 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகக் கட்டடம் கட்டும் பணி;

**என மொத்தம் 164 கோடியே 1 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 33 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரங்கள்!**

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 985 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், மூன்று சக்கர சைக்கிள்கள், திறன்பேசிகள், மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள், மடக்கு சக்கர நாற்காலிகள், காதொலிக்கருவிகள், மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்பு நாற்காலிகள், கல்வி உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 20,036 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 5512 பயனாளிகளுக்கு உதவித்தொகை, நலிந்தோர் உதவித் தொகை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் 725 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள், திருமண உதவித் தொகை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து நலப் பெட்டகங்கள், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் மின்னணு குடும்ப அட்டைகள், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கிராமப்புறங்களில் சிறிய அளவிலான நாட்டுக்கோழி பண்ணை அலகுகள் நிறுவ மானியம்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் 1109 பயனாளிகளுக்கு விசைக்கலை கருவி, சுழற்கலப்பை, விசை உழவான், சூரிய சக்தி பம்புசெட்டுகள் வழங்குதல், பண்ணை குட்டைகள் அமைத்தல், மானாவாரி மேம்பாட்டு திட்டம், பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களில் உதவிகள் வழங்குதல், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் தையல் இயந்திரங்கள், பித்தளைத் தேய்ப்புப் பெட்டிகள், கடனுதவி, சீர்மரபினர் நலவாரிய உறுப்பினர் அட்டைகள், ஆழ்துளை கிணறு மானியம், சீர்மரபினர் முதியோர் ஓய்வூதியம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தையல் இயந்திரங்கள், தேய்ப்பு பெட்டிகள், கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ஊரக வீடுகள் பழுது பார்ப்பு திட்டம், கிணறு அமைக்கும் திட்டம், மண் வரப்பு கட்டுதல் போன்ற திட்டங்களின் கீழ் உதவிகள் வழங்குதல், கூட்டுறவுத் துறை சார்பில் மகளிர் சுயஉதவிக் குழுக்கடன், மகளிர் தொழில்முனைவோர் கடன், பண்ணை சாராக் கடன், சிறுவணிகக் கடன், கைம்பெண் கடன், **என பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 53,039 பயனாளிகளுக்கு 161 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.**

இந்த விழாவில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், பால்வளம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி, எஸ்.மாங்குடி, காதர்பாட்சா முத்துராமலிங்கம், சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜித், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.